**அக்டோபர் – 02**

# TNPSC துளிகள்

- குஜராத்தில் உள்ள காந்தி நகரில் இந்திய விமானப் படையின் தென்மேற்கு விமானக் கட்டுப்பாட்டகத்தின் புதிய விமானப் படை அதிகாரியாக விமானப் படைத் தளபதி எஸ் கே கோட்டியா பொறுப்பேற்றுள்ளார்.
  - இப்பதவியை வகித்த விமானப் படைத் தளபதியான எச் எஸ் அரோராவிற்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். விமானப் படைப் பணியாளர்களின் துணைத் தலைவராக எச் எஸ் அரோரா விமானப் படைத் தலைமையகத்திற்கு மாற்றப் பட்டுள்ளார்.
- மொத்த தரப் புள்ளி சராசரியில் 9.95 மதிப்பெண் பெற்று கணினி அறிவியல் மற்றும் பொறியியல் உள்ளடங்கிய தொழில்நுட்பத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்ற கவிதா கோபால் என்பவர் இந்தியக் குடியரசுத் தலைவர் விருதை வென்ற மதராசின் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாவது மாணவி என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.
- பல்வந்த் சிங் ராஜோனாவின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வரான பியாந்த் சிங் என்பவர் படுகொலை செய்யப்பட்டதற்காக அவர் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு அவருக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.
  - பஞ்சாபில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை பெற்ற பியாந்த் சிங் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று சண்டிகரில் நடந்த குண்டு வெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஸ்கோச் விருதுகள் - சென்னை காவல் துறை

- பெருநகர சென்னை காவல் துறையானது பின்வருவனவற்றிற்காக இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.
  - சிசிடிவி கண்காணிப்பைச் செயல்படுத்துவதற்காக – பொது மக்கள் பங்களிப்புடன் இணைந்து ‘மூன்றாம் கண்’ என்ற ஒரு திட்டம்.
  - போக்குவரத்து விதிமுறை மீறல்களுக்கு எதிராக பணமில்லா முறையில் அபராதம் செலுத்த டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தியதற்காக.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் ஸ்கோச் விருதுகளை சென்னை காவல் துறைக்கு வழங்கினார்.


*இதுபற்றி*

- 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஸ்கோச் நல்லாட்சி விருதானது ஒரு சுயாதீன அமைப்பால் வழங்கப் படுகின்றது.
- இது தேசத்தின் முன்னேற்றத்திற்காக டிஜிட்டல், நிதி மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றில் சிறந்த முயற்சிகளை மேற்கொண்ட திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றை அங்கீகரிக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## திறந்தவெளிக் கழிப்பிடமற்ற இந்தியா

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு, கிராமப்புற இந்தியாவும் அதன் கிராமங்களும் தங்களை திறந்தவெளிக் கழிப்பிடமற்ற கிராமங்களாக அறிவித்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- கடந்த 60 மாதங்களில், 60 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு 11 கோடி கழிப்பறைகள் கட்டி வழங்கப் பட்டுள்ளன.
- தூய்மை இந்தியா கிராமின் என்ற திட்டமானது 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று தொடங்கப் பட்டது.




- இது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதிக்குள் அனைவருக்குமான துப்புரவு வசதியை ஏற்படுத்துதல், தூய்மையை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் திறந்தவெளியில் மலம் கழிப்பதை அகற்றுதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இது 75 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இந்த வேலைவாய்ப்புகளில் பெரும்பான்மையானவை கிராமப்புற மக்களால் கிடைக்கப் பெறுகின்றன.

## கங்கை வடிநில மாநிலங்களில் சிலை கரைத்தலுக்குத் தடை

- தசரா, தீபாவளி, சரஸ்வதி பூஜை உள்ளிட்ட பண்டிகைகளின் போது கங்கை அல்லது அதன் துணை நதிகளில் சிலைகளைக் கரைப்பதற்குத் தேசியத் தூய்மை கங்கைத் திட்டம் (National Mission for Clean Ganga - NMCG) தடை விதித்துள்ளது.
- இந்த உத்தரவானது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 5ன் கீழ் பிறப்பிக்கப் பட்டுள்ளது.
- இந்த உத்தரவை மீறுபவர்கள் ரூ 50,000ஐ மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு

அபராதமாகச் செலுத்த வேண்டும்.

- இந்த 11 கங்கை வடிநில மாநிலங்களில் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட இருக்கின்றன.

| | |
|---|---|
| உத்தரப் பிரதேசம் | உத்தரகாண்ட் |
| இமாச்சலப் பிரதேசம் | ஹரியாணா |
| ராஜஸ்தான் | தில்லி |
| பீகார் | ஜார்க்கண்ட் |
| மத்தியப் பிரதேசம் | சத்தீஸ்கர் |
| மேற்கு வங்காளம் | |

## பர்யதான் பர்வ் 2019 – சுற்றுலாத் துறை முன்னெடுப்பு

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது "பர்யதான் பர்வ் 2019" என்ற ஒரு சுற்றுலா சார்ந்த முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்தியர்களிடையே உள்நாட்டுச் சுற்றுலாவை ஊக்குவிப்பதும் "அனைவருக்கும் சுற்றுலா" என்ற செய்தியைப் பரப்புவதும் இந்த முன்னெடுப்பின் நோக்கங்களாகும்.
- மேலும், நாட்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1.05 கோடி சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிகின்றனர்.
- உலக சுற்றுலாத் தரவரிசையில் நாட்டின் இடம் 2013 ஆம் ஆண்டில் 65வது இடத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 34வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## ரயில் நிலையங்களில் "தூய்மை" குறித்த ஆய்வு அறிக்கை

- ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் "ரயில் நிலையங்களில்' தூய்மை குறித்த ஆய்வு அறிக்கை" (புறநகர் மற்றும் புறநகர் அல்லாத ரயில் நிலையங்களின் தூய்மை குறித்த ஆய்வு 2019) என்ற அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
- இந்த ஆய்வு 1000 மதிப்பெண்களைக் கொண்டதாக ஒரு மூன்றாம் தரப்பு தணிக்கையாக ரயில்வே நடத்தி இருக்கின்றது. தூய்மை மீதான தரவரிசைப் படுத்தலானது 720 ரயில் நிலையங்களில் நடத்தப்பட்டது.
- இந்த ஆய்வில் புறநகர் ரயில் நிலையங்களும் முதல் முறையாக சேர்க்கப்பட்டுள்ளன.
- ஜெய்ப்பூர், ஜோத்பூர் மற்றும் துர்காபுரா ஆகியவை முதல் மூன்று தூய்மையான ரயில் நிலையங்களாகும். இந்த 3 நிலையங்களும் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ளன.
- முதல் மூன்று ரயில்வே மண்டலங்கள்: வடமேற்கு ரயில்வே, தென்கிழக்கு மத்திய ரயில்வே மற்றும் கிழக்கு மத்திய ரயில்வே.

## எஸ்சி & எஸ்டி (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989

- உச்ச நீதிமன்றமானது 1989 ஆம் ஆண்டின் பட்டியலிடப்பட்ட இனத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் தொடர்பாக கடந்த

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழங்கப்பட்ட தீர்ப்பில் உள்ள அறிவுறுத்தல்களை திரும்பப் பெற்றுள்ளது.

- அந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி மத்திய அரசு விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்த தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது குடிமக்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் (Protection of Civil Rights Act - PCR Act) என்ற சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்வதற்கான விதிகளை நீர்த்துப் போகச் செய்தது.

***2018 ஆம் ஆண்டின் தீர்ப்பு***

- SC மற்றும் ST சட்டத்தை உச்ச நீதிமன்றம் நீர்த்துப் போகச் செய்து, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு "முன் ஜாமீன்" வழங்க அனுமதித்தது.
- மேலும் ஒரு வழக்கைப் பதிவு செய்வதற்கு முன்னர், இச்சட்டத்தின் கீழ் ஒரு புகாரானது "பதிவு செய்வதற்குத் தகுந்ததா அல்லது பிறரின் உந்துதல் மூலம் அளிக்கப்பட்டதா" என்பது குறித்து காவல்துறை ஒரு முதல்நிலை விசாரணையை நடத்த வேண்டும் என்றும் அது அறிவுறுத்தியது.
- இந்த இரண்டு நிபந்தனைகளும் அசல் சட்டத்தின் ஒரு பகுதியாக இல்லை.

***மாற்றியமைக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஆணை***

- மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவை உச்ச நீதிமன்றத்தின் அதே அமர்வு விசாரித்தது.
- இந்த அமர்வு இதற்கு முன்பு 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நீர்த்துப் போகச் செய்யும் அம்சங்களைத் திரும்பப் பெற்றுள்ளது.
- கட்டப் பஞ்சாயத்து, கும்பல் கொலை போன்ற சட்டமன்றத்தால் சட்டம் இயற்றப்படாத வழக்குகளில் "மட்டுமே" சில வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் விதிக்க முடியும் என்று அது ஒப்புக் கொண்டது.
- ஆனால் ஏற்கனவே ஒரு பாராளுமன்றச் சட்டம் (1989 ஆம் ஆண்டின் SC & ST சட்டம், போன்றவை) நடைமுறையில் இருக்கும் போது, நீதித்துறை அந்தச் சட்டத்தின் வரம்பிற்கு கட்டுப்படுகின்றது.

***இந்த வழக்கின் பெயர்***

- "சுபாஷ் காசிநாத் மகாஜன் (எதிர்) மகாராஷ்டிரா மாநிலம்" என்ற வழக்கில் இந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவின் டோங்ஃபெங் - 41 என்ற ஏவுகணை - 15,000 கி.மீ தொலைவு வரம்பு

- டோங்ஃபெங் - 41 (DF-41) என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சீனா வெளியிட்டுள்ளது.
- கம்யூனிஸ்ட் ஆட்சியின் 70வது ஆண்டு விழாவான சீனாவின் தேசிய தின அணி வகுப்பின் போது (அக்டோபர் 1 ,2019) இந்த ஏவுகணை வெளியிடப்பட்டது.
- DF-41 ஆனது பூமியில் உள்ள ஒரு மிக சக்திவாய்ந்த ஏவுகணை என்று கூறப்படுகின்றது.
- இது பூமியில் உள்ள எந்தவொரு ஏவுகணையை விடவும் மிக அதிகமாக 15,000 கிலோ மீட்டர் வரையிலான தொலைவு வரம்பைக் கொண்டுள்ளது.
- இது தன்னிச்சையாக இலக்கைக் குறிவைக்கும் 10 அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது. இது அமெரிக்காவை 30 நிமிடங்களில் தாக்கக் கூடிய திறன் கொண்டு விளங்கும்.

- சீனா தனது நீருக்கடியில் செல்லும் வாகனங்களையும் எதிரியின் கண்ணில் புலப்படாத புதிய டிஆர் - 8 என்ற ஆளில்லா விமானங்களையும் காட்சிப் படுத்தியுள்ளது. அவை ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமாக பறக்கும் திறன் கொண்டவையாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## ஆவண அடையாள எண் - மத்திய நேரடி வரிகள் வாரியம்

- மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் Central Board of Direct Taxes - CBDT) ஆவண அடையாள எண் முறையானது (Documentation Identification Number - DIN) தொடங்கப் பட்டுள்ளது.
- இனிமேல் CBDT உடனான ஒவ்வொரு தகவல் தொடர்புகளும் அதாவது ஒரு அறிவிப்பு, கடிதம், உத்தரவு, அழைப்பாணை அல்லது வேறு ஏதேனும் கடிதப் பரிமாற்றமாக அவை இருந்தாலும், அவை ஒரு ஒரு DINஐக் கொண்டிருக்க வேண்டும்.
- DIN (வாய்மொழி உத்தரவு) இல்லாத தகவல் தொடர்புகள் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அனுமதிக்கப் படுகின்றன.
- வருமான வரித் துறை மற்றும் வரி செலுத்துவோர் ஆகியோருக்கு இடையே வெளிப்படையான மற்றும் பதிவு செய்யப்பட்ட தகவல்தொடர்பிற்கு DIN வழிவகை செய்கின்றது.
- மேலும் எந்தவொரு தொந்தரவும் இல்லாமல் வரி செலுத்துவோருக்கு சிறந்த சேவைகளை இது வழங்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பூமியில் உள்ள மொத்த கரிமங்கள் (கார்பன்)

- அமெரிக்க தேசிய அறிவியல் நிறுவனத்தின் "ஆழ்கரிம வான் ஆய்வகம்" என்று அழைக்கப்படும் ஒரு 10 ஆண்டு காலத் திட்டமானது பூமியில் உள்ள மொத்த கரிமங்களை மதிப்பிட்டுள்ளது.
- இந்த திட்டமானது 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மேலும் இத்திட்டமானது எரிமலைகளால் வெளியிடப்பட்ட மொத்த கார்பன் டை ஆக்சைடு பற்றிய பகுப்பாய்வையும் உள்ளடக்கியுள்ளது.
- மனித குலத்தின் வருடாந்திர கார்பன் உமிழ்வானது அனைத்து எரிமலை உமிழ்வுகளையும் விட 40 முதல் 100 மடங்கு அதிகமாகும்.
- பூமியில் உள்ள மொத்தக் கரிமமானது 1.85 பில்லியன் ஜிகா டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

**1.85 BILLION GIGATONNES: TOTAL CARBON ON EARTH**

**BELOW THE SURFACE**

**1.845 BILLION Gigatonnes (Gt).** This includes:

**1.5 BILLION** Gt in lower mantle.

**315 MILLION** Gt in continental and oceanic lithospheres

**30 MILLION** Gt carbon in the upper mantle

**ABOVE THE SURFACE**

**43,500** Gt. This includes:

**37,000** Gt in the deep ocean (85.1%)

**3,000** Gt in marine sediments (6.9%)

**2,000** Gt in terrestrial biosphere (4.6%)

**900** GT in the surface ocean (2%)

**590** Gt in the atmosphere (1.4%)

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுர்ஜித் பல்லா – IMFன் நிர்வாக இயக்குநர்

- சர்வதேச நாணய நிதியத்தின் (International Monetary Fund - IMF) வாரியத்தில் இந்தியாவிற்கான நிர்வாக இயக்குநராக பொருளாதார நிபுணரான சுர்ஜித் எஸ் பல்லாவை மத்திய அரசு நியமித்துள்ளது.
- இவர் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவில் (Economic Advisory Council to the Prime Minister / EAC-PM) பகுதிநேர உறுப்பினராகப் பணியாற்றினார்.
- பிரதமர் தலைமையிலான நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது பல்லாவின் நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இவர் பதவியேற்ற நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை இப்பதவியில் நீடிப்பார்.
- உடல்நலக் குறைவால் காலமான ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநரான சுபிர் கோகர்னுக்குப் பிறகு பல்லா இப்பதவியில் நியமிக்கப் பட்டுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★